# இசைஞானி இளையராஜா அவர்கள்



சென்னையில் பிரசாத் ஸ்டுடியோவிலுள்ள இசைஞானி அவர்களின் அறையில் சந்தித்து உரையாடிய போது எடுத்தபடம் எம்முடன் வந்திருந்த அமெரிக்க நண்பர் விஸ்வநாதன் சங்கர் , மக்கள் சிந்தனைப் பேரவையின் செயலாளர் ந. அன்பரசு ஆகியோர் உடனிருந்தனர்.

2016 ஆம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழாவின் தொடக்க நிகழ்வுக்கான சிறப்பு விருந்தினராக இசைஞானி இளையராஜா அவர்களை அழைத்திருந்தோம். அவரை நேரில் அழைக்கும் பொருட்டு சென்னை பிரசாத் ஸ்டுடியோவில் முதல் முறையாகச் சந்தித்துப் பேசும் வாய்ப்புக் கிடைத்தது.

அழைப்பை ஏற்று இசைஞானி அவர்கள் ஈரோடு புத்தகத் திருவிழாவின் தொடக்க நிகழ்வுக்கு வருகைபுரிந்தார். விழா

வரலாற்றுச் சிறப்பு மிக்கதாக அமைந்தது. இதன் பிறகு நாம் செயலாளராகப் பொறுப்பேற்றிருக்கும் ஈரோடு தமிழ் இலக்கியப் பேரவை நிகழ்வுக்கு அழைக்க ஒருமுறை அதே பிரசாத் ஸ்டுடியோவில் சந்தித்துப் பேசினோம். அந்நிகழ்வுக்கு இசைஞானி ஈரோடு வந்திருந்தார். அச்சமயத்தில் எமது இல்லத்திற்கும் வருகை புரிந்தார்.

திருவண்ணாமலைக் கோயில் வளாகத்தில் நடைபெற்ற அவரது நூல் திறனாய்வுக் கூட்டத்தில் பேசுவதற்கு எம்மை அழைத்திருந்தார். நிகழ்வுக்கு முன்னும் பின்னும் திருவண்ணாமலை ரமணர் ஆசிரமத்தில் இசைஞானி அவர்கள் தங்கும் அறையில் அவரைச் சந்தித்துப் பேசும் வாய்ப்பும் கிடைத்தது.

கோவையிலிருந்து சென்னை செல்கிறபோது குமாரபாளையத்தில் , சென்னையில் வேறொரு நிகழ்வில் , கடலூர் மாவட்ட வெள்ள நிவாரணப் பணி தொடர்பாக சிதம்பரத்தில் என்று தொடர்ந்து சந்தித்து உரையாடுவதற்கான சூழல் ஏற்பட்டது.

பாவலர் வரதராசன் நினைவுகள் , அக்காலத்தில் கிராமம் கிராமமாகச் சென்று இசைமீட்ட அனுபவங்கள் என்று பல்வேறு நிகழ்வுகளைப் பற்றி பல கோணங்களில் நம்மிடம் உரையாடியுள்ளார். நாம் தெரிவித்த கருத்துக்களையும் உன்னிப்பாகக் கவனித்து உள்வாங்கிப் பதிலளிக்கும் பண்பும் இவரிடம் உள்ளது.

---